DMC KUNNAM

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| C.C.No. 110 /2025, Kunnam P.S. PW -9. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | கலைராஜ் | Calling | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | ஜெயங்கொண்டம் | Religion | : | - |
| Taluk | : | ஜெயங்கொண்டம் | Age | : | 54 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.02.2026. | | | | | |

எதிரி ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1) நான் தற்போது ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 25.03.2024 ஆம் வருடம் மங்களமேடு காவல் நிலையத்தில் நான் காவல் ஆய்வாளராகவும், சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. ராமச்சந்திரன் என்பவரும் பணியில் இருந்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் கடந்த 25.03.2024 ம் தேதி அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது கருணாநிதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதனை பரிசீலனை செய்து மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 110/2024 இதச பிரிவுகள் 279,337–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். மேற்படி உதவி ஆய்வாளர் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாகவும், அவருக்காகவும், எனக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் நிலையத்தில் பதிவு செயத்த முதல் தகவல் அறிக்கை **அ.த,சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

1) சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜு மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (சிறப்பு உதவி ஆய்வாளரால் தயார் செய்யப்பட்ட பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் சாட்சிகள் கருணாநிதி, முத்தையா, இளவரசன், சபரி, அண்ணாமலை, ராஜி , ரவி , பழனிசாமி, மணிகண்டன், முருகானந்தம், கண்ணதாசன்,

ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் இவ்வழக்கு சம்பத்தில் காயமடைந்த நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர், தணிகாசலம், மற்றும் விஜயகுமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) பின்னர் இவ்வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பாண்டுரங்கன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துபோய்விட்டார் என்பதால் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று இதச பிரிவு 279, 304(எ) ன் படி மாற்றம் செய்து அறிக்கை ஒன்று தயார் செய்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்பினை பெற்று கொண்ட நான் இவ்வழக்கில் இறந்து போன பாண்டுரங்கன் என்பவரின் சடலத்தை கைப்பற்றி பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தாக்கல் செய்தேன். (ஆய்வாளரால் தயார் செய்யப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர் இவ்வழக்கில் பிரதேதத்தை பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளரின் பரிந்துரை கடிதத்தினையும் தலைமை காவலர் முனீஸ்ராஜா என்பவர் மூலமாக மருத்துவர் கார்த்திகேயன் என்பவர் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் பிரேதம் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் மருத்துவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். (மருத்துவரால் பாண்டுரங்கன் என்பவருக்கு வழங்கப்பட்ட **பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இவ்வழக்கு சம்பவத்தில் விபத்தை ஏற்படுத்திய இரண்டு வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜாமணி என்பவருக்கு அனுப்பி ஆய்விற்கு பின்னர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் இரண்டு பெற்றேன். (மோட்டார் வாகன ஆய்வாளரால் வழங்கப்பட்ட வாகன ஆய்வறிக்கைகள் TN 46 AD 4603 என்ற வாகனத்தின் ஆய்வறிக்கைகள் **அ.த.சா.ஆ.10**

DMCUMCOURTKUMAM

ஆகவும் TN 46 L 4111 **அ.த.சா.ஆ.11 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது).

4) பின்னர் இவ்வழக்கின் புலன் விசார 27.08.2024 ம் தேதி அன்று இதச பிரிவுகள் 279,304(ஏ) ன்படி குற்றம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்து ஒரு நாள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தில் அடிப்பட்டு இறந்துபோனதாக சொல்லப்படும் நபருக்கு ஓட்டுநர் உரிமம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தை நேரடியாக பார்த்த நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJMCOURT, KUNNAM